பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 10 2026 7 15
வியாழக்கிழமை காலை
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று நடைபெறும் மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு தின கொண்டாடத்தில் பங்கேற்கிறார்.
- ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்து இந்திய குடிமக்கள் தங்களுடைய குடியுரிமையை இழந்துவிட வேண்டாம் என்று வெளியுறவு அமைச்சகம் எச்சரித்துள்ளது.
- மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், அமெரிக்காவில் போலந்து நிதித்துறை அமைச்சர் திரு. ANDRZEJ DOMANSKI வுடன் இருதரப்பு வர்த்தக உறவுகள் குறித்து விவாதித்தார்.
- துபாயில் இருந்து டெல் அவிவ் சென்று கொண்டிருந்த விமானத்தின் கேப்டனை தாக்கி அதை மோத செய்ய முயற்சித்த ஓமன் நாட்டை சார்ந்த துணை விமானியை சவுதி அரேபிய அதிகாரிகள் கைது செய்தனர்.
- ஆசிய விளையாட்டுப் போட்டியில் செபகத்ரா பிரிவின் குழு ஆட்டத்தில் இந்தியா - வியட்நாமை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் ஜி-20 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்திற்கு இடையே மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், போலந்து நிதித்துறை அமைச்சர் திரு. ANDRZEJ DOMANSKI வுடன் இருதரப்பு வர்த்தக உறவுகள் குறித்து விவாதித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. பியூஷ் கோயல், இந்தியா – போலந்து இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து தாங்கள் விவாதித்தாக தெரிவித்துள்ளார்.

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மூலம் வர்த்தகங்களுக்கு ஏற்படும் புதிய வாய்ப்புகள் குறித்த விவாதிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியா - போலந்து இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், தாங்கள் விவாதித்தாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><><>

மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுதில்லியில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு, நினைவு நாணயம், அஞ்சல் தலை மற்றும் புத்தகத்தை அவர் வெளியிட உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதும் உள்ள மாநில குடிமைப் பணியாளர் தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மத்திய அரசு உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள் UPSC அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><><>

ரஷ்ய ராணுவத்தில் சேர்ந்து இந்திய குடிமக்கள் தங்களுடைய குடியுரிமையை இழந்துவிட வேண்டாம் என்று வெளியுறவு அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யாவிற்கு பயணம் மேற்கொள்ளும் இந்தியர்கள் அங்கு வேலைவாய்ப்புகளை தேடும் போது எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அறிவுறுத்தியுள்ளது.

ரஷ்ய ராணுவத்தில் சேருவதற்கு தாமாக முன்வந்து முயற்சிப்பது ஆபத்தானது என்றும் அது கூறியுள்ளது.

அரசு சாரா நிறுவனங்களால் ரஷ்ய ராணுவத்தில் ஆட்கள் சேர்க்கப்படுவதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து வெளியுறவு அமைச்சகத்தில் பதிவு செய்யப்படாதவர்களிடம் இருந்து வேலைவாய்ப்புகளை ஏற்பதற்கு முன்பாக இந்திய குடிமக்கள் கவனத்துடன் செயல்படுமாறு வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

<><><><><><><><>

தில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மகளிர் கல்லூரி மாணவிகளின் பாதுகாப்பு குறித்து கல்லூரி முதல்வர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களுடன், துணைநிலை ஆளுநர் திரு. தரண்ஜித் சிங் சாந்து விவாதித்தார்.

அப்போது மாணவிகளின் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் பிரத்தியேகமாக காவல்துறை அதிகாரிகளை நியமிக்குமாறு துணைநிலை ஆளுநர் அறிவுறுத்தினார்.

தெருவிளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் ஆகியவை உரிய முறையில் செயல்படுவதை உறுதி செய்யுமாறும் காவல்துறையினரின் ரோந்து பணியை வலுப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடைக்கோடி பகுதிகள் உட்பட நகரின் அனைத்து பகுதிகளுக்கும் பொதுப்போக்குவரத்து சேவையை அளிக்குமாறு போக்குவரத்து துறை அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு மாநகராட்சி அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

கல்லூரிகளுக்கிடையேயான பாதுகாப்பு குழுவை உருவாக்குமாறும் துணைநிலை ஆளுநர் பரிந்துரைத்தார்.

<><><><><><><><>

பாதுகாப்புத்துறை சொத்துகளை பாதுகாப்பதிலும் மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை மேம்படுத்துவதிலும் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த பாதுகாப்புத்துறை நிலநிர்வாக சேவை பயிற்சி அதிகாரிகளுடன் அவர் உரையாடினார்.

தொழில்நுட்பம் மூலம் பொறுப்புணர்வை வலுப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இளம் அதிகாரிகள் அழுத்ததிற்கு அடிபணிய வேண்டாம் என்றும், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<><><><><><><><>

தேசிய மாணவர் படையை சேர்ந்த மாணவர்களுக்கு மத்திய அரசின் சார்பில் ட்ரோன் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது.

அந்த வகையில் மாநில அளவிலான ட்ரோன் தொழில்நுட்ப பயிற்சியின் 10 நாட்கள் சிறப்பு முகாம் தமிழ்நாட்டின் சேலத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த ட்ரோன் தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்வது தங்களுக்கு புது அனுபவமாக இருந்தது என்றும் தங்களுடைய எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக அமையும் என்றும் அப்பயிற்சியில் கலந்துகொண்ட மாணவிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<><><><><><><><>

ஜவுளி துறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் குறித்து விவாதிப்பதற்கான மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் இம்மாநாட்டை தொடங்கிவைக்கிறார்.

நாடு முழுவதும் உள்ள ஜவுளித்துறையுடன் தொடர்புடைய 400 சிறு-குறு தொழில்துறையினர் இதில் கலந்துகொள்கின்றனர்.

பல்வேறு நாடுகளுடன் மத்திய அரசு மேற்கொண்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம் ஏற்படும் சந்தை வாய்ப்புகள் குறித்து இதில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜவுளித்துறை தொடர்பான மத்திய அரசின் தொலைநோக்கு பார்வை, திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து இம்மாநாட்டில் விளக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><><>

துபாயில் இருந்து டெல் அவிவ் சென்று கொண்டிருந்த விமானத்தின் கேப்டனை தாக்கி அதை மோத செய்ய முயற்சித்த ஓமன் நாட்டை சார்ந்த துணை விமானியை சவுதி அரேபிய அதிகாரிகள் கைது செய்தனர்.

நேற்று அந்த துணை விமானி கேப்டனை கத்தியால் குத்தியதால் ஏற்பட்ட சம்பவம் காரணமாக விமானம் சுமார் 17 ஆயிரத்து 400 அடி கீழே இறங்கியதாகவும் அப்போது பயணிகளும் விமான ஊழியர்களும் விமானியின் அறைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய துணை விமானியை தடுத்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து அந்த விமானம் சவுதி அரேபியாவில் உள்ள தபுக் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

காயம் அடைந்த விமானத்தின் கேப்டன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் நோக்கி சென்ற விமானத்தில் இருந்த 174 பேரின் உயிரை காப்பாற்றிய இந்தியரான கேப்டன் ஸ்மித் மச்சார் ஒரு கதாநாயகன் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹுவும், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்பும் பாராட்டியுள்ளனர்.

<><><><><>

ஆசிய விளையாட்டுப் போட்டியில் செபகத்ரா பிரிவின் குழு ஆட்டத்தில் இந்தியா - வியட்நாமை வென்றது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் வியட்நாமுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா 15-12, 15-9 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றது.

வாலிபால் பிரிவில் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஸ்குவாஷ் அரையிறுதி ஆட்டத்தில் ஆடவர் பிரிவில் இந்தியா - மலேசியாவையும், மகளிர் பிரிவில் ஹாங்காங்கையும் எதிர்கொள்கிறது.

கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<><><><><><>

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குவஹாத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த வெஸ்ட்இண்டீஸ் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 405 ரன் எடுத்தது.

406 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 43 புள்ளி 3 ஓவரில் 2 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

தொடக்க வீரர் கேப்டன் சுப்மன் கில் 133 பந்துகளில் 223 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ரோஹித் ஷர்மா 101 ரன் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை, இந்தியா 2-0 என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றியது.

மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் நியூ சண்டிகரில் நடைபெற உள்ளது.

<><><><><><>